11.02.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### "தானிய உற்பத்தியை அதிகரிக்க ஆப்பிரிக்காவில் முதலீடு செய்ய வேண்டும்'

தானியங்கள், எண்ணெய் வித்துகளின் உற்பத்தியை அதிகரிக்க ஆப்பிரிக்க நாடுகளில் முதலீடு செய்ய இந்திய நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் ராதாமோகன் சிங் அழைப்புவிடுத்தார்.

இந்திய - ஆப்பிரிக்க வேளாண் தொழில் கூட்டமைப்பு மாநாடு தில்லியில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்று அமைச்சர் ராதாமோகன்சிங்பேசியதாவது:

உலக அளவில் உணவு தானியங்களின் உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. அதிக மக்கள்தொகை கொண்ட நாடான இந்தியாவில் இதன் தாக்கம் அதிகம் உள்ளது. உணவு தானியங்களுக்கும், எண்ணெய் வித்துகளுக்கும் பிற நாடுகளையே இந்தியா சார்ந்திருக்கிறது. ஆண்டொன்றுக்கு சுமார் 50 லட்சம் டன் தானியங்களை இந்தியா இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இதனால் அரசுக்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க, ஆப்பிரிக்க நாடுகளில் வேளாண் துறைகளில் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வர வேண்டும். அவ்வாறு முதலீடு செய்யும்பட்சத்தில், அங்கு உணவு தானியங்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து, அவற்றை இந்தியாவுக்கு மலிவு விலையில் கொண்டு வர முடியும். இந்தியாவில் விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்களில் ஈடுபட தனியார் துறையினர் ஊக்குவிக்கப்படுகின்றனர். தனியார் துறையின் வருகையால் உணவு தானியங்களின் உற்பத்தியை கணிசமாக அதிகரிக்க முடியும் என்றார் ராதாமோகன் சிங்.

## ரூ.80 லட்சத்துக்குப் பருத்தி ஏலம்

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.80 லட்சத்துக்குப் பருத்தி ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்தில் ஆர்.சி. எச் ரகப் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.4,400 முதல் ரூ.4,865 வரையிலும், டி.சி.எச் ரகப் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.5,400 முதல் ரூ.6,265 வரையிலும், மட்டரகப் பருத்தி ரூ.1,600 முதல் ரூ.2,100 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.80 லட்சத்துக்கு பருத்தி ஏல வர்த்தகம் நடைபெற்றது.ஏலத்தில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 460 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 18 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

நீலகிரி மாவட்டம், குன்னூர் தோட்டக்கலைத் துறை சார்பில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை திட்டத்தின் கீழ், மாவட்ட அளவிலான பயிற்சி முகாம் அதிகரட்டியில் புதன்கிழமை நடைபெற்றது.

முகாமில், நுண்ணுயிர் பாசனப் பராமரிப்பு முறைகள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், பல்வேறு பாசனங்கள் முறை குறித்து விவசாயிகளுக்கு ஏற்பட்ட சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஷீலா, உதவி தொழில்நுட்ப மேலாளர் பரமசிவம், உள்ளிட்டோர் இப்பயிற்சிகளை அளித்தனர். இந்நிகழ்ச்சியில், அதிகரட்டி மற்றும் சுற்றுபுறப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சாத்தனூர் அணையில் நாளை தண்ணீர் திறக்கப்படலாம்:பொதுப்பணித் துறை தகவல்

அரசு அனுமதி கிடைக்கும்பட்டத்தில், சாத்தனூர் அணையில் இருந்து பாசனத்துக்காக வெள்ளிக்கிழமை முதல் தண்ணீர் திறக்கப்படலாம் என பொதுப்பணித் துறையினர் தெரிவித்துள்ளனர். இதன் மூலம்

திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயனடைவர்.

தண்டராம்பட்டை அடுத்த சாத்தனூர் கிராமத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே சாத்தனூர் அணை கட்டப்பட்டுள்ளது. அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 119 அடி. மொத்த நீர் கொள்ளளவு 7,321 மில்லியன் கனஅடி. இந்த அணை மூலம் திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

அணை நிரம்பியது: தமிழகத்தில் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த தொடர் மழையால் சாத்தனூர் அணை நிரம்பி வழிந்தது. எனவே, உபரி நீர் ஏற்கெனவே திறந்துவிடப்பட்டது. இந்நிலையில், சாத்தனூர் அணையில் இருந்து வெள்ளிக்கிழமை தண்ணீர் திறந்துவிட பொதுப்பணித் துறை திட்டமிட்டுள்ளது. இதற்கான அனுமதி கேட்டு அரசுக்கு கோப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும், புதன்கிழமை இரவு வரை தண்ணீர் திறப்பதற்கான அரசு அனுமதி கிடைக்கவில்லை.

அனுமதி கிடைக்கும்பட்சத்தில், வெள்ளிக்கிழமை தண்ணீர் திறக்கப்படும். இல்லாவிட்டால் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தண்ணீர் திறக்கப்படும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

45 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும்: அணையில் தற்போது முழு கொள்ளளவான 7,321 மில்லியன் கனஅடி தண்ணீர் தேங்கியுள்ளது. அணையில் இருந்து தண்ணீர் திறக்கும்போது அணையின் வலப்புற கால்வாய் வழியாக 24 ஆயிரம் ஏக்கர் நிலமும், இடப்புற கால்வாய் வழியாக 21 ஆயிரம் ஏக்கர் நிலமும் என மொத்தம் 45 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

## 19-ல் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 19-ஆம் தேதி நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில், அரசின் அனைத்துத் துறை அதிகாரிகளும் கலந்துகொண்டு விவசாயிகளின் குறைகள், கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்கின்றனர்.

எனவே, மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்களது குறைகள், கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை வரும் 15-ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியருக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கலாம். மேலும், மாவட்டத்தின் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளில் போடலாம்.

இந்த மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறைதீர் கூட்டத்தில் உரிய பதில் அளிக்கப்படும் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## பெராம்பட்டு அணைக்கட்டில் ரூ.10 கோடியில் வெள்ளத் தடுப்புப் பணி தொடக்கம்

சிதம்பரம் அருகே உள்ள பெராம்பட்டு அணைக்கட்டில் பொதுப்பணித் துறையால் ரூ.10 கோடி செலவில் வெள்ளத் தடுப்புப் பணிகள் புதன்கிழமை தொடங்கப்பட்டன.

சிதம்பரம் அருகே பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் கீழ் உள்ள பெராம்பட்டு கிராமத்தில் பழைய கொள்ளிடமும், கொள்ளிடம் ஆறும் கலக்கும் இடத்தில் பெராம்பட்டு அணைக்கட்டு உள்ளது.

இதன் மூலம் 16,500 கனஅடி வெள்ளநீர் மட்டுமே வெளியேற்ற முடியும்.

இதனால், 2010, 2011 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் சுமார் 29,500 கனஅடி வரை வெள்ளநீர் வந்ததால் உடனடியாக வெளியேற்ற முடியாமல் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்நிலையில், தமிழக அரசின் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணியின் மூலம் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதன்கிழமை பூமி பூஜையுடன் பணிகள் தொடங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் ச.செல்வராஜ், செயற் பொறியாளர் ச.ராமமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் பி.கே.சுப்பிரமணியன், உதவிப் பொறியாளர்கள் ரமேஷ், முத்துக்குமரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பின்னர் கண்காணிப்புப் பொறியாளர் ச.செல்வராஜ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இங்கு மேற்கொள்ளப்படும் வெள்ளத் தடுப்பு பணியின் மூலம் கடல் உப்புநீர் உள்புகுதல் தடுத்தல், விளை நிலங்களுக்கு சுமார் 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதி கிடைக்கும்.

பழைய கொள்ளிடம் ஆற்றில் வெள்ளநீர் வரும் போது 16,500 கனஅடிக்குப் பதிலாக, புதிய அணை மற்றும் பழைய அணையில் 33,000 கனஅடி நீர் வெளியேற்றவும் வடிவமைக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்றார்.

## பயிர் மேலாண்மைப் பயிற்சி:120 விவசாயிகள் பங்கேற்பு

பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற ஒருங்கிணைந்த பயிர் மேலாண் பயிற்சியில் 120 விவசாயிகள் பங்கேற்றனர்.

அட்மா திட்டம் சார்பில் நல்லம்பள்ளி, காரிமங்கலம், பாலக்கோடு ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

வேளாண்மை அலுவலர் எழில்முருகன் தலைமை வகித்துப் பயிற்சியைத் தொடக்கி வைத்தார்.

துணை வேளாண் இயக்குநர் உழவர் பயிற்சி நிலையம் பாஸ்கரன், வேளாண் அறிவியல் நிலைய முனைவர் வெண்ணிலா, உதவிப் பேராசிரியர் சங்கீதா ஆகியோர், பயறு வகைப் பயிர்களில் விதைத் தேர்வு, நிலம் தயாரிப்பு, நீர் நிர்வாகம், உர மேலாண்மை, ஒருங்கிணைந்த

பூச்சி, நோய் நிர்வாகம், மானாவாரி சாகுபடி குறித்த தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் அருண்குமார், சிவசங்கரி, இளவரசி ஆகியோர், ஊட்டச்சத்து குறைபாடுகள், மண்புழு உரம், பயறு வகைப் பயிர்களில் 2 சத டி.ஏ.பி. கரைசல் தெளிப்பு முறை பற்றிய செயல் விளக்கம் குறித்து விரிவாகப் படக் காட்சியுடன் விளக்கினர். உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் இ.கோபிநாத், கி.ரேணுகா, கார்த்திக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பாம்பாறு அணையிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறப்பு**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பாம்பாறு அணையிலிருந்து முதல்வர் உத்தரவின்படி பாசனத்துக்காக தண்ணீரை மாவட்ட வருவாய் அலுவலர் சூ.கிருஷ்டி புதன்கிழமை திறந்து வைத்தார்.

பாம்பாறு அணையிலிருந்து முதல் மண்டலத்தில் 5 நாள்களுக்கும், 2-ஆவது மண்டலத்தில் 5 நாள்களுக்கும் தண்ணீர் விட்டு 5 நாள்களுக்கு தண்ணீரை நிறுத்தியும் சுழற்சி முறையில் மொத்தம் 6 நனைப்புகளுக்கு புதன்கிழமை முதல் 85 நாள்களுக்குத் தண்ணீர் திறக்கப்படும். இதன் மூலம் மொத்தம் 4000 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வகையில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் பாவக்கல், ஓபவலசை, நல்லவன்பட்டி, எட்டிப்பட்டி, நடுப்பட்டி, குப்பநத்தம், தாம்பல், வேடகட்டமடுவு, புளியம்பட்டி, மிட்டப்பள்ளி, மூன்றம்பட்டி, போத்தராஜன் பட்டி, கொட்டுக்காரண்பட்டி, கரியபெருமாள்வலசை மற்றும் மேல்செங்கம்பாடி என 15 கிராமத்தில் உள்ள நிலங்கள் பயன் பெறும். விவசாய மக்கள் பொதுப்பணித்துறையினருடன் ஒத்துழைத்து நீரினை சிக்கனமாகப் பயன் படுத்தி அதிக விளைச்சல் பெறவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. அறிவிக்கப்பட்ட தேதிக்கு பிறகு எக்காரணத்தை கொண்டும் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்படமாட்டாது என மாவட்ட வருவாய் அலுவலர் சூ.கிருஷ்டி தெரிவித்தார்.

பாம்பாறு அணையின் மொத்தக் கொள்ளளவு 19.86 அடி. நீரின் அளவு 18.13 அடி பாசன பரப்பளவு 4000 ஏக்கர் உள்ளது.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி வருவாய்க் கோட்டாட்சியர் முகமது அஸ்லாம், பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர் செல்வராஜ், உதவி செயற்பொறியாளர் கே.சரவணக்குமார், உதவிப் பொறியாளர் செல்வகுமாரி, மாநில நிலவள வங்கித் தலைவர் சாகுல்அமீது, ஒன்றியச் செயலர் எ.சி.தேவேந்திரன், நகரச் செயலர் சிவானந்தம், ஒன்றியக்குழுத் தலைவர் கிருஷ்ணன், துணைத் தலைவர் சுப்பிரமணி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் கண்ணன், திருஞானம், ஒன்றிய விவசாய அணிச் செயலர் வேங்கன், ஓட்டுநர் அணி ஒன்றியச் செயலர் கே.ஜகநாதன். மருத்துவர் இளையராஜா, வட்டாட்சியர் ராஜசேகரன் மற்றும் பாம்பாறு அணைநீர் பாதுகாப்பு இயக்கத் தலைவர் சௌந்தர்ராஜன்,விவசாயப் பாசன ஆயக்கட்டு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் விவசாயிகள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் செய்த வியாபாரிகளிடம் ரூ.3,82,000 வசூலிப்பு

விருத்தாசலம்: விவசாயிகளிடம் நேரடி நெல் கொள்முதல் செய்யும் வியாபாரிகளிடம், மாவட்ட விற்பனைக்குழு அலுவலர்கள் 'செஸ்' வரி வசூலை தீவிரப்படுத்தியுள்ளனர்.

தமிழகத்தில் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, கடலூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்கள், டெல்டா அல்லாத மாவட்டங்களில் சம்பா நெல் அறுவடை தீவிரமாக நடக்கிறது. இதனால், தனியார் அரிசி

ஆலை உரிமையாளர்கள் தமிழகம் முழுவதும் விவசாயிகளிடம் நேரடி நெல் கொள்முதல் செய்து, லாரிகளில் ஏற்றிச் செல்கின்றனர். 1987 வேளாண் விளைபொருட்கள் விற்பனை ஒழுங்குமுறைச் சட்டம், விதிகள் 1991ன் படி ஒரு சதவீதம் செஸ் வரி வசூலித்து வந்தனர். இதற்கு, வியாபாரிகள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில், 'செஸ்' வரி கட்டாயம் செலுத்த வேண்டும் என கடந்தாண்டு நவம்பர் 16ல் ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவிட்டது. மேலும், வேளாண் வர்த்தகத்துறை ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் உத்தரவு போன்றவற்றால் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்குழு அலுவலர்கள் 'செஸ்'வரி வசூலில் ஈடுபட்டனர்.

இதற்கு, எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 5ம் தேதி மார்க்கெட் கமிட்டி வியாபாரிகள் கொள்முதல் பணிகளை புறக்கணித்தனர். இதனால், கடலூார் மாவட்டம், விருத்தாசலத்தில் வழக்கமாக கொள்முதல் செய்த உள்ளூர், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் வியாபாரிகளை தவிர்த்து, ஆரணி, வேலுார் வியாபாரிகள் மூலம் கடந்த 7ம் தேதி கொள்முதல் பணியை முடுக்கி விட்டனர்.

இதையடுத்து, நேற்று முன்தினம் முதல் வழக்கம்போல் கொள்முதல் பணிகளை வியாபாரிகள் துவக்கினர். அதன்படி, மாவட்ட விற்பனைக்குழு அலுவலர்கள் விருத்தாசலம், ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார்கோவில், குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, புவனகிரி உள்ளிட்ட பகுதிகளில் நடத்திய வாகன தணிக்கையில் 228 வாகனங்களுக்கு 3 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டது.

மாவட்ட விற்பனைக்குழு செயலர் சுரேஷ்பாபு கூறுகையில், 'விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யும் வியாபாரிகள், 1987 வேளாண் விளைபொருள் விற்பனை சட்டம், விதி 1991ன் படி, 'செஸ்'வரி கட்டாயம் கட்ட வேண்டும். இல்லையேல், பிரிவு 50(பி)ன்படி, இரண்டு மடங்கு செஸ்வரி அல்லது 1,000 ரூபாய் இதில் எது அதிகமோ அது

வசூலிக்கப்படும். மூன்று முறை செஸ்வரி செலுத்த மறுப்பவர்களின் விளைபொருட்களை பறிமுதல் செய்து, கோர்ட்டில் ஒப்படைக்கப்படும்' என்றார்.

## தென்னை கழிவுகளை உரமாக்கலாம் காந்திகிராம பேராசிரியர் தகவல்

திண்டுக்கல்,: "தென்னை கழிவுகளை வீணாக்காமல் உரம் தயாரித்து லாபம் பார்க்கலாம்," என காந்தி கிராம வேளாண் ஆராய்ச்சி மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் ஆலோசனை கூறினார்.அவர் கூறியதாவது: தென்னை சாகுபடி விவசாயிகளிடம் தென்னை சார்பு பொருட்களான நார், தேங்காய் மட்டை, மஞ்சு அதிகளவில் வீணாகிறது. தென்னை சாகுபடியில் அதிகளவிலான விவசாயிகள் செயற்கை உரங்களையேபயன்படுத்துகின்றனர்.

இதனால், இயற்கையான மண்ணின் தன்மை கெட்டு போகிறது. இதற்கு மாற்றாக விவசாயிகள் குழி அமைத்து, தென்னை கழிவுகளை உரமாக்கலாம். ஆனால் விவசாயிகளிடையே விழிப்புணர்வின்றி, தென்னை கழிவுகளை வீணாக்குவது, எரிப்பது என, செயல்படுகின்றனர். தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் மட்டைகள், பாளை, பன்னாடைகள் மற்றும் காய் காம்புகைசிறு துண்டுகளாக்க வேண்டும். இதில் ஒரு பகுதியை தரையில் 10 அடி படுக்கையாக பரப்ப வேண்டும். அதில் 20 கிலோ பசுஞ்சாணத்தை நீரில் கலக்கி தெளித்து அதன் மேல் பயோ கம்போஸ்ட் கலவையை துாவ வேண்டும்.பயோ கம்போஸ்ட் கலவையில் எளிதில் மக்கும் பாக்டீரியாக்கள், பூஞ்சானங்கள் உள்ளன. பின் ஒரு அடி உயரத்திற்கு தென்னை கழிவுகளை போட்டு நீரும், பயோ கம்போஸ்ட்டும் இட வேண்டும். இதே போல் 4 அல்லது 5 அடுக்குகள் அமைக்க வேண்டும். டன் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் பயோ கம்போஸ்ட் கலவையை சீராக தெளிக்க வேண்டும். இந்த குவியலை நிழற்பகுதியில் அமைத்து, உலர்ந்து போகாமல் ஈரம் இருக்குமாறு மீண்டும் மீண்டும் நனைப்பது நல்லது. சில நாட்கள் கழித்து குவியலை கலக்க வேண்டும்.இவ்வாறு செய்தால் நன்கு மக்கிய இயற்கை உரம் கிடைக்கும்.

இதனை விவசாயிகள் உரமாக பயன்படுத்தலாம். இதற்கு வரவேற்பு அதிகம் என்பதால், விற்பனை செய்தும் லாபம் பார்க்கலாம், என்றார்.

## குவைக்கிற்கு ஏற்றுமதியாகும் தேனி பப்பாளி மாதம் ரூ.50,000 லாபம் சம்பாதிக்கிறார் விவசாயி



தேனி, :தேனி லட்சுமிபுரத்தில் இயற்கை உரம் மூலம் விளையும் உயரம் குறைவான 'ரெட் ராயல்' ரக பப்பாளி 'ருசி' மிகுதியால் குவைத் உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு டன் கணக்கில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் மூலம் மாதம் ரூ. 50,000 வரை விவசாயி பாலசுப்பிரமணி லாபம் ஈட்டிவருகிறார்.

தேனி லட்சுமிபுரத்தை சேர்ந்த விவசாயி பாலசுப்பிரமணி. இவருக்கு சொந்தமான 3 ஏக்கர் நிலத்தில் குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய உயரம் குறைவான 'ரெட்ராயல்' ரக பப்பாளி மரங்களை சாகுபடி செய்துள்ளார். இம்மரங்கள் மூலம் வாரத்திற்கு ஒரு முறை 2 டன் பப்பாளி பழங்களை மகசூலாக பெற்று வருகிறார். ஒவ்வொரு பழமும் குறைந்தது 2 கிலோவுக்கும் அதிகமான எடையுள்ளது.

பழுக்கும் நிலைக்கு முன்னதாகவே மரத்தில் இருந்து காய்கள் பறிக்கப்பட்டு, அவை கேரள மொத்த வியாபாரிகள் மூலம் நவீன முறையில் 'பேக்கிங்' செய்யப்பட்டு அங்கு கொண்டு செல்லப்படுகிறது.

பின் அங்கிருந்து விமானம் மூலம் குவைத்திற்கு ஏற்றுமதி

செய்யப்படுகிறது.பாலசுப்பிரமணி கூறுகையில், " இதுபோன்ற பப்பாளி மரங்களுக்கு காற்றோட்டம், இடைவெளி முக்கியம். 'ஹைபிரிட்' வகையை சேர்ந்த 'ரெட் ராயல்' பப்பாளி ஒன்றரை அடி உயரத்தில் பயன்தரக்கூடியது. ஒரு மரம் குறைந்தது 10 முதல் 15 காய்கள் தரும். பழுக்கும் நிலையில் உள்ள காய்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன. வாரத்திற்கு ஒரு முறை 2 டன் வரை மகசூல் கிடைக்கிறது. கைக்கு எட்டிய தூரம் பறிப்பதால், காய்கள் சேதாரம் இல்லை. கிலோ ரூ. 8 க்கு விற்கப்படுகிறது.

இம்மரங்கள் மூன்று ஆண்டுகள் வரை பயன்படக்கூடியவை. ரசாயன உரம் பயன்படுத்துவதில்லை. பால், மீன்,மாட்டுச்சாணம், கோமியம் உட்பட பஞ்சகாவியம் அடங்கிய இயற்கை உரத்தில் விளையும் இந்த பப்பாளிக்கு 'சுவை' அதிகம். இதனால் கேரள மொத்த வியாபாரிகள் டன் கணக்கில் வாங்கிச் செல்கின்றனர். பின் அங்கிருந்து குவைத் உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு விமானம் மூலம் பப்பாளிப் பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஜூன், ஜூலை மாதங்களில் இவற்றுக்கு கிராக்கி அதிகம்.

அந்தநேரத்தில் கிலோ ரூ. 10க்கு விற்போம். ரத்தத்தில் உயிரணுக்கள் அதிகரிக்கச் செய்து நோய் எதிர்ப்பு சக்தி கொடுப்பதால் இதை பலரும் விரும்பி உண்கின்றனர். பப்பாளி சாகுபடியால் மாதந்தோறும் ரூ. 50,000 லாபம் ஈட்டி வருகிறேன்," என்றார்.

## அற்புத உயிர் உரம் அசோலா: வேளாண் அதிகாரி யோசனை

கோபிசெட்டிபாளையம்: 'அசோலா' என்னும் தாவரம் பசுந்தாள் உரமாகவும், கால்நடை தீவனமாகவும் விவசாயிகளிடம் பிரபலமாகி வருவதாக, நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது: பெரணி வகையை சேர்ந்த அசோலா, மாட்டு தீவனமாகவும், கோழி தீவனமாகவும், இயற்கை உரமாகவும் பயன்படுகிறது. தண்ணீரில் வேகமாக வளரும் தன்மை கொண்ட

இத்தாவரம், இயற்கை விவசாயிகளுக்கும், இயற்கை உரங்களை பயன்படுத்துபவர்களுக்கு மிகவும் ஏற்றது. இது வளரும்போது காற்றில் உள்ள தழைச்சத்தை ஈர்த்து மண்ணில் சேர்த்து பயிர் வளர்ச்சிக்கு உதவுகிறது. இதை நீர் தேங்கிய நெல் வயலில் இட்டும், தனியாக தொட்டிகளில் வளர்த்தும் பயன்படுத்தலாம். இதில் புரதச்சத்து, 30 சதவீதமும், தாது உப்பு 12 சதவீதமும் உள்ளதால், ஆடு, மாடு, முயல், கோழிகளுக்கு தீவனமாக பயன்படுத்தலாம். இதை வளர்ப்பதால் கரிமப் பொருட்களுடன், யூரியா இடும் செலவும் குறைகிறது. அசோலா இட்ட வயல்களில் களைப்பிரச்னை குறைகிறது. இத்தகைய நல்ல பயன்களை தரும் அசோலாவை உழவர்கள் பயன்படுத்தி, விவசாயிகள் சிறப்பான மகசூல் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கோடை மழையை எதிர்பார்த்து நிலத்தை தயார் செய்யும் விவசாயிகள்

கூடலுார்: கூடலுாரில் கோடை மழையை எதிர்பார்த்து, நிலத்தை தயார் செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கூடலுார், பந்தலுார் பகுதியில், பருவ மழை காலத்தில் நெல்லும், கோடை காலத்தில் பாகற்காய், பஜ்ஜிமிளகாய், பீன்ஸ், பயறு, முள்ளங்கி, கத்தரிகாய், பூசனிகாய் உள்ளிட்ட விளைபொருட்களை, விவசாயிகள் உற்பத்தி செய்கின்றனர். நடப்பாண்டில், நெல் அறுவடை நிறைவடைந்ததை தொடர்ந்து, காய்கறிகள் உற்பத்திக்காக, நிலத்தை தயார் செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

சிறு விவசாயிகள் கூறுகையில், ' பொதுவாக, பருவமழையை தொடர்ந்து, நிலத்தடி நீர் உயர்ந்து, கோடையில் நீர் நிலைகளில் விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் கிடைக்கும். ஆனால், கடந்த ஆண்டு பருவ மழை குறைவாக பெய்ததால், கோடைக்கு முன்பே நீர் நிலைகளில் தண்ணீர் வரத்து குறைந்து வருகிறது. கோடையில் தண்ணீர் இன்றி காய்கறி உற்பத்தி பாதிக்கும் அபாயம் உள்ளது. இதனால், கோடை மழையை எதிர்பார்த்து விவசாயத்தை துவங்கியுள்ளோம். இதற்கு தேவையான உதவிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்' என, தெரிவித்தனர்.

## கொய்மலர்களுக்கு கிராக்கி விலை குறைவால் பாதிப்பு

குன்னூர்: காதலர் தினத்தை முன்னிட்டு, கொய்மலர்களுக்கு கிராக்கி இருந்தும், விலை குறைந்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால், கொய்மலர் சாகுபடி ஊக்குவிக்கப்பட்டது. லில்லியம், கார்னே ஷன், ஜெர்பரா, ஆந்துாரியம், புளூ டெய்சி உட்பட, பல்வகை கொய்மலர்கள், பசுமைக் குடில்களில் சாகுபடி செய்யப்படுகின்றன.

வரும், 14ம் தேதி, காதலர் தினத்தை முன்னிட்டு, சென்னை, பெங்களூரு, மும்பை உட்பட பல பகுதிகளுக்கு, மலர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. மலர்களுக்கு போதிய விலை கிடைக்காததால், உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

மலர் சாகுபடி விவசாயி ராஜா கூறுகையில், "மழையால், ஒசூர் உட்பட பகுதிகளில், ரோஜா மலர்களின் உற்பத்தி குறைந்துள்ளது; குன்னூர் கொய்மலர்களுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது. கடந்தாண்டு, 10 மலர்கள் அடங்கிய ஒரு கொத்து, 20 - 22 ரூபாய்க்கு விற்கப்பட்ட நிலையில், தற்போது, 18 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதால், இழப்பு ஏற்பட்டுள்ளது," என்றார்.

## நிலக்கடலையில்"அட்மா' திட்டம்

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டம், கேதையுறும்பு, கொல்லபட்டியில் "அட்மா' திட்டம் மூலம் நிலக்கடலை பயிரில் பண்ணைப் பள்ளி துவக்க விழா நடந்தது.திண்டுக்கல், வேளாண் துணை இயக்குனர் தவமுனி நிலக்கடலை சாகுபடி குறிக்கும், ஒட்டன்சக்கிரம் உகவி இயக்குனர் அருணாசலம் அரசு திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விளக்கினர். விஞ்ஞானிகள் செல்வமுகிலன், சுவாமிநாதன், பூச்சி, நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து பேசினர். தொழில்நுட்ப மேலாளர் செல்வநாயகம் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மகேந்திரன், சுரேஷ்பாபு செய்தனர்.

## ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் கறவை மாடுகள் விலை அதிகம்

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரம் மாட்டுச் சந்தையில் விவசாயிகள் வாங்கும் கறவை மாடுகளின் விலை அதிகமாகவும், வியாபாரிகள் வாங்கும் அடிமாடுகள் விலை குறைவாகவும் இருந்தது.

வாரந்தோறும் திங்களன்று ஒட்டன்சத்திரம் நகராட்சியின் மாட்டுச் சந்தை நடக்கிறது. கேரளாவில் இருந்து அடிமாடுகளை வாங்குவதற்கு வியாபாரிகளும், தமிழகத்தில் பிற பகுதிகளில் இருந்து விவசாயிகள் மாடுகளை விற்கவும், வாங்கவும் குவிகின்றனர். நேற்று நடந்த சந்தையில் அடிமாடுகள் அதிகமாகவும், கறவை மாடுகள் குறைவாகவும் காணப்பட்டது. உசிலம்பட்டி பகுதிகளில் இருந்தும் மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. தற்போது இப்பகுதியில் வேளாண் தொழில் மும்முரமாக நடந்து வருகிறது. அதற்கு ஆகும் செலவை ஈடுகட்டும் வகையில் பல விவசாயிகள் தாங்கள் வளர்த்து வந்த மாடுகளில் சிலவற்றை விற்க வருகின்றனர். அவ்வாறு கொண்டு வரப்படும் கறவை மாடுகளை விவசாயிகளே வாங்கிச் செல்கின்றனர். இவை விலை அதிகமாக விற்கப்படுகிறது. அதே சமயத்தில் நடுத்தரம் மற்றும் வயதான மாடுகளை வியாபாரிகள் இறைச்சிக்காக வாங்கு கின்றனர். இவற்றின் விலை குறைவாக விற்கிறது. நடுத்தர வயதுடைய மாடு ஒன்று ரூ.15 ஆயிரத்துக்கு மேல் விலை போக வேண்டியது, ஆயிரம், இரண்டாயிரம் குறைவாக விற்றதாக விவசாயிகள் தெரிவித்தனர். கறவை மாடுகள் எப்போதும் விற்கும் விலையைக் காட்டிலும் சற்று கூடுதலாக விற்றன.

## 2,000 டன் நெல் கொள்முதல் இலக்கு

கரூர்: நேரடி நிலையங்கள் மூலம், 2,000 டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது,

இதுகுறித்து, கலெக்டர் ராஜேஷ் வெளியிட்ட அறிக்கை: நடப்பாண்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால், கரூர் தாலுகாவில் சுக்காலியூர், அரவக்குறிச்சி தாலுகாவில் சின்னதாராபுரம், குளித்தலை

தாலுகாவில் நச்சலூர், கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் கோவக்குளம் மற்றும் கட்டளை, மண்மங்கலம் தாலுகாவில் பள்ளாபாளையம் ஆகிய, ஆறு இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் ஒன்றன் பின் ஒன்றாக திறக்கப்பட்டு வருகிறது. இதன், முதற்கட்டமாக, கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் அமைந்துள்ள கட்டளையில், நேரடி கொள் முதல் நிலையமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு, 17 சதவீத ஈரப்பதத்திற்கு ஆதார விலை மற்றும் ஊக்கத்தொகையும் சேர்த்து நெல் கிரேடு, 'ஏ' ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு, 1,520 ரூபாய், பொது ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு, 1,460 ரூபாய் வழங்கப்படுகிறது. விவசாயிகளின் வங்கி கணக்கில், இ.சி.எஸ்., முறையில் பணம் செலுத்தப்படும். மேலும், நெல் பயிரிடப்பட்டதை கணக்கில் கொண்டு இந்த, ஆறு நேரடி நிலையங்கள் வாயிலாக நெல்வரத்து, 2,000 மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தாவரவியல் துறையின் சர்வதேச கருத்தரங்கம்

கரூர்: கரூர் அரசு கலைக்கல்லூரி தாவரவியல் துறை, மத்திய அரசின் டிப்பார்ட்மென்ட் பயோ டெக்னாலஜி, இந்தியன் கவுன்சில் பார் மெடிக்கல் ரிசர்ஜ் சார்பில் சர்வதேச கருத்தரங்கம் கல்லூரியில் நேற்று துவங்கியது. மனித நலனில் உயிரினங்களின் பல்வகைத்தன்மையும் மற்றும் உயிர்செயல் தாவர மருந்துகளின் செயல்பாடும் - 2016 என்ற தலைப்பில் சர்வதேச அளவிலான கருத்தரங்கம் கல்லூரியில் நேற்று துவங்கியது. கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் பாரி தலைமை வகித்தார். கொச்சி மீன்வளம் மற்றும் கடல்சார் பல்கலை வேந்தர் பேராசிரியர் பத்மகுமார், கருத்தரங்கை துவக்கி வைத்தார். உயிரினங்களின் பல்வகைத்தன்மை, மூலிகைத்தாவரங்களின் வேதிப்பொருள்களின் பல்வகைத்தன்மை, கடல் சயோனபாக் பீரியாவின் முக்கியத்துவம் ஆகிய தலைப்புகளில் பல்கலை துணைவேந்தர் பேராசிரியர் சவுத்ரி முகம்மது ஹசன், தேசிய கடன் மற்றும் மீன் வளம் ஆராய்ச்சியாளர் சந்திரலதா, ரகுகுமார், ஸ்காட்லாந்து அபிரிதின் பல்கலை பேராசிரியர் ரைனர் ஏபல், ஸ்டார்ச் கிளைட் பார்மஸி ஆகியோர் பேசினர். நாளை (பிப்., 12) வரை கருத்தரங்கம் நடக்கிறது.

## இந்தாண்டு புளி விளைச்சல், விலை அதிகரிப்பு! மகிழ்ச்சியில் வியாபாரிகள்

போடி : மாவட்டத்தில் கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டு புளி விளைச்சல் மற்றும் விலை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மற்றும் மட்டுமின்றி புளிய மரங்களை குத்தகைக்கு எடுத்த வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் போடி, சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் 10,000 ஏக்கருக்கு மேல் புளிய மரங்கள் விளைச்சலில் உள்ளது. புளி இங்கிருந்து தமிழக, கேரள பகுதி மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை புளிக்கான சீசனாகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன் போதுமான மழை இல்லாததால், புளிய மரங்களில் பூ பூக்க காலதாமதம் ஏற்பட்டு, விளைச்சலும் குறைந்திருந்தது. இதனால் அப்போது சீசன் துவக்கத்தில் கொட்டை எடுக்கப்பட்ட புளி குவிண்டால் ரூ. 6,000 முதல் ரூ. 6, 250 வரை இருந்தது. சில்லரையில் கிலோ ரூ. 70 முதல் ரூ. 80 வரை இருந்தது. சீசன் முடியும் தருவாயில் குவிண்டால் ரூ.8,000 முதல் ரூ. 8, 500 ரூபாய் வரை விலை போனது. சில்லரையில் கிலோ ரூ.90 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டது.

விலை உயர்வு : மழையின் காரணமாக கடந்தாண்டு புளி விளைச்சல் அதிகரித்து கொட்டை புளி குவிண்டால் ரூ.3, 200 முதல் 3, 500 வரை விலை போனது. வடகிழக்கு பருவமழை கைகொடுத்ததால், இந்தாண்டு புளிய மரங்களில் பூக்களும் அதிகரித்ததோடு, புளி விளைச்சலுக்கான சீசனும் முன்கூட்டியே துவங்கி விட்டது. தற்போது ஓடுகள் நீக்கப்பட்ட கொட்டை புளி ரூபாய் ரூ. 3, 500 முதல் ரூ.4,000 வரை விற்பனையாகிறது. வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்து ரூ. 5,000 வரை விற்பனை செய்து வருகின்றனர். புளியில் விளைச்சல் மட்டுமின்றி விலையும் அதிகரித்துள்ளதால் விவசாயிகள், புளிய மரங்களை குத்தகைக்கு எடுத்த வியாபாரிகளும் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## இலவம் பஞ்சு விலை சரிந்தது

வருஷநாடு : கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை,முத்தலாம்பாறை, வாய்க்கால்பாறை, தங்கம்மாள்புரம், வைகைநகர், தர்மராஜபுரம், வருஷநாடு,வாலிப்பாறை,தும்மக்குண்டு, குமணந்தொழு, கோம்பைத் தொழு, முருக்கோடை உட்பட பல பகுதிகளில் பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் இலவம் பஞ்சு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கடந்தாண்டு போதிய விளைச்சல் இல்லை. ஆனால் ஒரு கிலோ பஞ்சு ரூ.100-110 வரை விற்பனை செய்யப்பட்டது. விளைச்சல் அதிகரித்து இந்தாண்டு துவக்கத்திலேயே கிலோ ரூ.60க்கு விற்பனை செய்யப்படுவதால், இதை பயிரிட்ட விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனனர்.

## ரூ.1.10 கோடியில் சண்முகா நதி அணை பராமரிப்பு பணிகள்

உத்தமபாளையம் : ரூ. 1.10 கோடியில் சண்முகாநதிஅணை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி கிடைத்துள்ளது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால் டெண்டர் விடப்பட்டுபணிகள் விரைவில் துவங்கும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சண்முகாநதி அணை 2004ல் பயன்பாட்டிற்கு வந்தது. ஹைவேவிஸ் மலையில் இருந்து கிடைக்கும் தண்ணீர் மற்றும் வறட்டாறு போன்றவற்றில் தண்ணீரை தேக்கி சண்முகாநதி அணை கட்டப்பட்டது. இந்த அணையின் மூலம் ஆனைமலையன்பட்டி, ராயப்பன்பட்டி, சின்னஓவுலாபுரம், கன்னிசேர்வைபட்டி, ஓடைப்பட்டி உள்ளிட்ட பல கிராமங்களை சேர்ந்த 1, 640 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் இப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான கிணறுகள் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கு வாய்ப்பளிக்கிறது.அணை கட்டப்பட்டு பல ஆண்டுகளை கடந்தும் பராமரிப்பு பணிகள் செய்யவில்லை. எனவே பராமரிப்பு பணிகள் செய்ய பொதுப்பணித்துறை மதிப்பீடுகள் தயாரித்து அரசின் அனுமதிக்கு அனுப்பி வைத்தது.

அனுமதி : அதன்பேரில் தற்போது சண்முகாநதிஅணை பராமரிப்பு செய்ய ரூ. 1.10 கோடியில் அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையினர் கூறும்போது,"அணையில் ஒரு பகுதியில்

இருந்து மற்றொரு பகுதிக்கு செல்ல வசதியாக நடைமேடை அமைக்கவும், பல்வேறு பராமரிப்பு பணிகள் செய்யவும் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது. விரைவில் டெண்டர்கள் கோரப்பட்டு பணிகள் துவங்கும்," என்றனர்.

## வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவால் கூடுதல் மகசூல்; வேளாண் அதிகாரி தகவல்

கம்பம் : "வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவால் பயிர்களில் கூடுதல் மகசூல் கிடைக்கும்," என, மாவட்ட வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப் பாடு) ஜெயபாண்டியன் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் பயன்படுத்தும் உரம் மற்றும் பூச்சி மருந்துகளுக்கு மத்திய அரசு கோடிக்கணக்கான ரூபாய் மானியம் வழங்குகிறது. வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு யூரியா இன்றியமையாத உரம். தழைச்சத்து வழங்கும் பணியை யூரியா செய்து, பயிர் செழிப்பாக வளர உதவுகிறது. ஒரு மூடை யூரியா விலை ரூ. 270 . மத்திய அரசு மானியம் வழங்காவிட்டால் அதன் விலை ரூ. 1, 150 ஆக இருக்கும். எனவே யூரியா பயன்பாட்டை மத்திய அரசு தீவிரமாக கவனிக்கத் துவங்கியது. வேளாண் தவிர இதர விஷயங்களுக்கும் யூரியா அதிகமாக பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டு, அதை தடுக்க அதிகாரிகள் முடுக்கி விடப்பட்டனர். அதன் விளைவாக வேப்ப எண்ணெய் கலந்த யூரியா உற்பத்தி செய்யப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதனை விவசாயம் தவிர பிற விஷயங்களுக்கு பயன்படுத்த முடியாது. மூடைக்கு ரூ. 13 மட்டுமே அதிகமாகும். யூரியா உற்பத்தி செய்யும் கம்பெனிகள், தங்களின் உற்பத்தியில் 50 சதவீதம் வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவை கண்டிப்பாக உற்பத்தி செய்ய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் இந்த யூரியாவை வாங்க விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். வாசனை மற்றும் சற்று பெரியதாக இருப்பது காரணமாக கூறப்படுகிறது.

மாவட்ட வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) கே.ஆர்.ஜெயப்பாண்டியன் கூறுகையில்,"" வேப்ப எண்ணெய் கலந்த யூரியா கடந்த 5 மாதங்களுக்கு முன் அறிமுகம் செய்யப்பட்டது. யூரியாவை விவசாயத்திற்கு தவிர பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்தக் கூடாது என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொதுவாக

ஒரு மூடை யூரியாவுடன் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து பயன்படுத்த பரிந்துரை செய்வோம். இப்போது வேப்ப எண்ணெய் கலந்து விட்டதால் அந்த 5 கிலோ தேவையில்லை. 10 முதல் 15 சதவீத தழைச்சத்து கூடுதலாக கிடைக்கும். தண்ணீரில் வேகமாக கரையாமல், நின்று மெதுவாக பலன் தரும். செலவு குறைகிறது. எனவே வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவை தாராளமாக பயன்படுத்தலாம். இதனால் பயிர்களில் மகசூல் கூடுதலாக கிடைக்கும்," என்றார்..

## ரூ. 15 ஆயிரத்தை தொடும் என்று நம்பிக்கை: வரத்து குறைவால் மஞ்சள் வியாபாரம் பாதிப்பு

நாமகிரிப்பேட்டை: வரும் நாட்களில் மஞ்சள் விலை , 15 ஆயிரம் ரூபாயை தொடும் என்ற நம்பிக்கையால், உள்ளூர் மண்டிகளுக்கு விற்பனைக்கு வரும் மஞ்சள் அளவு குறைந்தது. இதனால், நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில், ஈரோட்டிற்கு அடுத்து நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் வியாபாரம் பெரியஅளவில் நடக்கிறது. இங்கு, 17 தனியார் மண்டிகள் மற்றும் ஆர்.சி.எம்.எஸ். கூட்டுறவு சங்கம் மூலம் வாரம்தோறும், 10 ஆயிரம் மூட்டைகளுக்கு மேல் மஞ்சள் விற்பனையாகும். இதன் மூலம் நாமகிரிப்பேட்டையில் மட்டும் மாதம், 10 கோடி ரூபாய் வரை வியாபாரம் நடக்கிறது.

ரூ. 12,000 விற்பனை: இந்நிலையில் ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாவட்டங்களில் பருவமழை பொய்த்ததால், மஞ்சள் செடிகள் கருகின. இதனால், தமிழக மஞ்சளுக்கு இந்த ஆண்டு நல்ல விலை கிடைக்கும் என வேளாண் துறை, மஞ்சள் வியாபாரிகள் தெரிவித்திருந்தனர். அதேபோல், டிசம்பரில், மஞ்சள் விலை கிடுகிடுவென உயர்ந்து, 100 கிலோ மூட்டை, 13 ஆயிரம் ரூபாயை தொட்டது. ஆனால், சில வாரங்களில், மஞ்சள் விலை குறைந்தாலும், தற்போது மூட்டை, 12 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது.

2,000 மூட்டை: மஞ்சள் விலை நிச்சயம் உயரும் என்ற நம்பிக்கையால், தற்போது விவசாயிகள், மஞ்சளை விற்க தயங்குகின்றனர். நேற்று முன்தினம் நாமகிரிப்பேட்டையில் நடந்த ஏலத்தில், ஆர்.சி.எம்.எஸ்.,க்கு, 183 மூட்டைகள் மட்டுமே விற்பனைக்கு வந்திருந்தது. தனியார் மண்டிகளில், 2,000 மூட்டைகள் வந்திருந்தது. சில மண்டிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. கடந்த ஆண்டு இதே மாதத்தில், ஆர்.சி.எம்.எஸ்.,சில் மட்டும் வாரம், 2,000 மூட்டைகள் விற்பனைக்கு வந்துள்ள நிலையில், தற்போது, மண்டிகளுக்கு விடுமுறை விடும் அளவிற்கு மஞ்சள் வரத்து குறைந்துள்ளது.

அடுத்த மாதம் சீசன்: இதுகுறித்து, தனியார் மண்டி உரிமையாளர்கள் கூறியதாவது: அறுவடை சீசன் துவங்கினால் மஞ்சள் விலை குறைந்து விடும் என்று, ஒரு மாதத்திற்கு முன்பே, கையிருப்பு மஞ்சளை விவசாயிகள், வியாபாரிகள் விற்று விடுவர். ஆனால், தற்போது, விலை உயரும் என்ற நம்பிக்கை நிலவுவதால், யாரும் விற்க முன்வரவில்லை. அடுத்த மாதம் சீசன் துவங்கும் போது, விலை, 15 ஆயிரம் ரூபாயை தொடும் என நம்புகின்றனர். அதனால், மண்டிகளுக்கு வரத்து குறைந்ததால், வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மலர் தொடுக்கும் நிகழ்ச்சி

ராசிபுரம்: ராசிபுரத்தில், பக்தர்கள் சார்பில் மலர் தொடுக்கும் நிகழ்ச்சி வரும், நாளை (12ம் தேதி) நடக்கிறது. கொங்கணாபுரம், திருமலை திருப்பதி ஸ்ரீமன் நாராயணா நித்ய புஷ்ப கைங்கர்ய சபா அறக்கட்டளை சார்பில், ஆண்டுதோறும் பல்வேறு பகுதிகளில் மலர்கள் சேகரிக்கப்பட்டு, திருப்பதிக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. வரும், 14ம் தேதி திருப்பதியில் ரத சப்தமி உற்சவ விழா நடக்கிறது. இதற்காக, மலர் அனுப்ப ராசிபுரம் ஆயிர வைசிய திருமண மண்டபத்தில் பக்தர்கள் சார்பில் மலர் தொடுக்கும் நிகழ்ச்சி நாளை(12ம் தேதி) நடக்கிறது. மல்லி, சாமந்தி,

ரோஜா, மேரிகோல்ட், துளசி, அரளி, மருவு, தாமரை, சம்பங்கி உள்ளிட்ட மலர்கள், கரும்பு, தென்னம்பாளை, தென்னங்குருத்து, பாக்கு குலை, இளநீர், மாங்காய் போன்றவை பக்தர்களிடம் சேசரிக்கப்பட்டு, அவை மாலைகளாக தொடுக்கப்பட்டு, திருப்பதியில் உள்ள தங்க கொடிமரம் மற்றும் உள் பிரகாரங்களில் அலங்கரிக்கப்பட உள்ளது. இதற்கு, 'பக்தர்கள் மலர்களை வழங்கலாம்' என, அறக்கட்டளை நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

## நோயிலிருந்து காக்க கோ 49 நெல் பயிரிட மாற்று ஏற்பாடு ண தண்ணீர் இருந்தால் எந்த சீதோஷ்ணமும் தாங்கும்

காரைக்குடி:"டீலக்ஸ்' பொன்னி நெல் விளைச்சலில் குலை நோய் தாக்கம் அதிகமாக இருந்ததால், வரும் ஆண்டுகளில் இந்த ரகத்தை பயிரிட வேண்டாம், அதற்கு பதில் கோவை வேளாண் பல்கலை அறிமுகப்படுத்திய, கோ 49 ரகத்தை பயிரிட வேளாண்துறையினர் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

சாக்கோட்டை ஒன்றியத்தில் இந்த ஆண்டு 6 ஆயிரம் எக்டேர் நெல் விவசாயம் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 4,500 எக்டேர் பயிரிடப்பட்டுள்ளது. 70 சதவீதம் டீலக்ஸ் பொன்னி ரகமே விளைவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு 912 மி.மீ., மழை பெய்தது. இந்த ஆண்டு 868 மி.மீ., மழை பெய்துள்ளது. சராசரி அளவான 860-ஐ காட்டிலும் அதிகமே.

நிரம்பாத கண்மாய்கள் அனைத்தும் நிரம்பின. மடையிலிருந்து தண்ணீர் திறந்து விடும் நிலையிலோ, மோட்டார் மூலம் எடுப்பதற்கு வசதியாகவோ இருந்தது. நீர் இருப்பை பார்த்து விவசாயிகள், செப்டம்பர், அக்டோபரில் விதைப்பை மேற்கொண்டனர். தொடர் மழையால் தண்ணீர் பிரச்னையின்றி நெல் நாற்று செழித்திருந்தது.

ஜனவரியில் போதிய வெயில் இன்றி குளிர் வாட்டி வதைத்ததால், நெற் பயிர்களை நோய் தாக்கியது. கதிராக வேண்டிய பயிர் பதரானது.

எப்படியாவது காப்பாற்றி விடலாம் என்று விவசாயிகள்,வழக்கத்தை விட அதிக பூச்சி கொல்லிகளை அடித்தனர். இயற்கையின் கோரத்தில் நெல் நாற்று கருகி போனது. இதனால், இந்த ஆண்டு கோவை வேளாண் பல்கலை புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள கோ 49 ரக நெல் விவசாயத்தை மேற்கொள்ள வேளாண்துறையால் பரிந்துரைக்கப்பட உள்ளனர்.

வேளாண் அதிகாரி ஒருவர் கூறும்போது: டீலக்ஸ் ரகத்தை பொறுத்தவரை ஒரு நாள் மழை நான்கு நாள் நல்ல வெயில் என்றிருந்தால் மட்டுமே நோய் தாக்காது. தொடர் மழை பெய்தாலோ, குளிரடித்தாலோ நோய் தாக்க ஆரம்பித்து விடும்.

விதை கண்டு பிடித்து 10 ஆண்டுக்கும் மேலாகி விட்டதால், அதன் நோய் எதிர்ப்பு குறைவு. விவசாயிகள் இதை உணர்வது இல்லை. எனவே, இந்த ஆண்டு 135 நாளில் பலன் தரும் கோ 49 ரகத்தை பரிந்துரை செய்ய உள்ளோம். ஏக்கருக்கு 3 கிலோ விதை போதும். சன்ன ரகம். ஏக்கருக்கு 40 மூடை வரை கிடைக்கும். தண்ணீர் மட்டும் இருந்தால் எந்த சீதோஷ்ண நிலையிலும் பலன் தரக்கூடியது, என்றார்.

## கிலோ ரூ.165க்கு விற்பனை முருங்காய்க்கு தட்டுப்பாடு

சிவகங்கை:சிவகங்கை வாரச்சந்தையில் நேற்று ஒரு கிலோ ரூ.165 க்கு விற்கப்பட்டாலும், முருங்கைக்காய் கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்பட்டது.சிவகங்கையில் புதன் தோறும் நடக்கும் வாரச்சந்தை நேற்று நடந்தது. திருமண முகூர்த்தம் என்பதால் வாடிக்கையாளர்கள் கூட்டம் குறைவாக இருந்தது. காய்கறிகளின் விலை வழக்கமான அளவிலேயே இருந்தது. முருங்கைக்காய் வரத்து இல்லாததால் சந்தையில் காணப்படவில்லை. ஒரே ஒரு வியாபாரி மட்டும் வைத்திருந்த முருங்கை காய்களையும் கல்யாண சமையலுக்கு மொத்தமாக கிலோ ரூ. 165 க்கு வாங்கி சென்று விட்டனர். காய்கறி வாங்க வந்தவர்கள் முருங்கைக்காய் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்தனர். அதேபோல் பஜ்ஜி மிளகாயும் விற்பனைக்கு வரவில்லை. குடை மிளகாய் ஒன்று ரூ.5 க்கு விற்கப்பட்டது. காலிப்பிளவர் பூ ஒன்று ரூ.40 க்கு விற்கப்பட்டாலும், பலரும் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர்.

**விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன பயிற்சி**

வத்திராயிருப்பு:வத்திராயிருப்பு வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு வேளாண் துறையின் சார்பில் நுண்ணீர் பாசன அமைப்பின் பராமரிப்புகள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது. வலையபட்டி கிராமத்தில் நடந்த இப்பயிற்சிக்கு ஸ்ரீவி., வேளாண் உதவி செயற்பொறியாளர் குரூஸ்மோகன்சுந்தர் தலைமை வகித்தார்.

தொழில்நுட்ப மேலாளர் வனஜா வரவேற்றார். உதவி பொறியாளர் இளங்கோ, விஜயகுமார் பயிற்சியளித்தார். சொட்டுநீர் பாசன விவசாயிகள், சிறு, குறு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர்கள் சுரேஷ்குமார், அருண்குமார் செய்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பால் உற்பத்தியில் இந்தியா அபாரம்**



புதுடெல்லி: கடந்த 2014-15 நிதியாண்டில் நாட்டின் பால் உற்பத்தி 146.31 மில்லியன் டன்களாக உள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் இது 137.7 மில்லியன் டன்களாக இருந்தது. தற்போதைய உற்பத்தி

அளவின்படி பால் உற்பத்தி நாடுகளான அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், பிரேசிலை விட முன்னேறி உலக அளவில் முதல் இடத்தில் இருக்கிறது. இதுகுறித்து மத்திய விவசாயத்துறை அமைச்சர் ராதாமோகன் சிங் கூறுகையில், ''நாட்டின் பால் உற்பத்தி கடந்த ஆண்டில் முந்தைய ஆண்டை விட சுமார் 6.3 சதவீதம் அதிகரித்துள்ளது. வளர்ந்த நாடுகளை விட இந்தியாவில் ஒரு கறவை மாட்டுக்கான பால் உற்பத்தி சராசரி குறைவாக இருந்தாலும் முன்னிலை பெற்றிருக்கிறது'' என்றார்.

## புழல் அருகே கால்நடை துறைக்கு சொந்தமான ☐25 கோடி ஆக்கிரமிப்பு நிலம் மீட்பு

அதிகாரிகள்அதிரடிநடவடிக்கை

புழல் : புழல் அருகே கால்நடை துறைக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த வீடுகளை வருவாய்த்துறை இடித்து தரைமட்டமாக்கியது. மீட்கப்பட்ட நிலத்தின் மதிப்பு ரூ.25 கோடி என அதிகாரிகள்தெரிவித்தனர்.

சென்னை பெருமாநகராட்சிக்குட்பட்ட 24 வார்டு, புழல் அடுத்த சூரப்பட்டு ராஜ் நகரில் கால்நடை துறைக்கு சொந்தமான 7 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தை 5க்கும் மேற்பட்டோர் ஆக்கிரமித்து வீடுகளை கட்டி குடியேற போவது, அம்பத்தூர் கால்நடை துறையினருக்கு தெரியவந்தது. இதையடுத்து அதிகாரிகள் மாதவரம் வருவாய் துறையினருக்கு புகார் அளித்தனர். அதன் அடிப்படையில் மாதவரம் தாசில்தார் ரஜேந்திரன் தலைமையில் சூரப்பட்டு வருவாய்த்துறை ஆய்வாளர் வெற்றி குமார், சூரப்பட்டு கிராம நிர்வாக அலுவலர் மாரி, சூரப்பட்டு கால்நடை துறை உதவி இயக்குநர் டாக்டர் சிந்தியா ஆகியோர் சம்பவ இடத்துக்கு சென்று ஆய்வு செய்தனர். அப்போது கால்நடை துறைக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்து வீடுகளை கட்டி இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து பொக்கலைன் இயந்திரம் வரவழைத்து ஆக்கிரமிப்பு வீடுகளை இடித்து தரைமட்டம் ஆக்கினர். நிலத்தை கையகப்படுத்தியதாக அறிவித்தனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில்: கால்நடை துறைக்கு மற்றும் அரசு சொந்தமான நிலத்தை அத்துமீறி ஆக்கிரமித்தால்,ஆக்கிரமிப்பாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது மீட்கப்பட்ட நிலத்தின் மதிப்பு □25 கோடி ஆகும் .

## சொட்டுநீர் பாசன முறையில் தர்பூசணி பயிரிட விவசாயிகள் ஆர்வம்

ரிஷிவந்தியம், : ரிஷிவந்தியம் அருகே யால் கிராமத்தில் சொட்டுநீர் பாசன முறையில் விவசாயம் செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிது. ரிஷிவந்தியம் ஒன்றியத்திற்குட்பட்ட யால் கீழ்பாடி, பெரிய பகண்டை உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் வழக்கமாக கரும்பு, நெல், கம்பு ஆகியவற்றை விவசாயிகள் பயிர் செய்து வந்தனர். கடந்த ஒரு வருடமாக தண்ணீர் பற்றாக்குறையாலும், பருவம் தவறிய மழையினாலும் விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டு வந்தது.

விவசாயிகள் பலர் விளைநிலத்தை விற்றுவிட்டு ஆந்திர, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு கூலி வேலைக்கு சென்று விட்டனர்.இந்நிலையில் இப்பகுதியில் உள்ள விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறையில் கத்தரி, வெண்டைகாய், தர்பூசணி, வெள்ளரி ஆகிய பயிர்களை விவசாயம் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இம்முறையை பயன்படுத்துவதால் தண்ணீர் அதிகமாக தேவைபடுவதில்லை என்றும், ஆட்கள் பற்றாக்குறையை சமாளிப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

## 9,800 மூட்டை பருத்தி ரூ.1.60 கோடிக்கு ஏலம்

ஆத்தூர், : புதுக்கோட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் நடந்த ஏலத்தில் 9,800 மூட்டை பருத்தி ரூ.1.60 கோடிக்கு விற்பனையானது.சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே புதுப்பேட்டையில், ஆத்தூர் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில்

வாரம் தோறும் திங்கட்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இதில் பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், நாமக்கல், சேலம் மாவட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள், தங்கள் நிலத்தில் விளைந்த பருத்தியை விற்பனை கொண்டுவருவார்கள்.

இதனை ஈரோடு, கோவை, கும்பகோணம், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்கை சேர்ந்த வியாபாரிகள் வாங்கி செல்வார்கள். நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் 9,800 பருத்தி மூட்டைகளை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். இதில், ஆர்சிஎச் ரகம் பருத்தி, குவிண்டால் ரூ.4,439 முதல் ரூ.4,901 வரையும், டிசிஎச் ரகம் குவிண்டால் ரூ.5,829 முதல் ரூ.6,349 வரையும் விலை போனது. மொத்தம் 9,800 மூட்டை பருத்தி ரூ.1.60 கோடிக்கு ஏலம் போனது.

## சொட்டுநீர் பாசனத்துக்கு மானியம் விவசாயிகளுக்கு வேண்டுகோள்

நாமக்கல், : சொட்டுநீர் பாசனத்துக்கு மானியம் பெற வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலரை அணுகுமாறு விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையின் மூலம் சிறு, குறு மற்றும் இதர விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்துத் தரப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு நிதி ஒதுக்கீடு தனியாக பெறப்பட்டுள்ளது. இதில், 5 ஏக்கர் வரை நிலம் உள்ளவர்களுக்கு முழு மானியத்துடன் கூடிய சொட்டுநீர் பாசன கருவிகளும், 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களுக்கு 75 சதவீதம் மானியத்தில் கருவிகள் வழங்கப்படுகிறது. எனவே, விருப்பமுள்ள விவசாயிகள் தங்களது விவசாய நிலத்தின் சிட்டா, அடங்கல், சிறு, குறு விவசாயி என்பதற்கான சான்று, ரேஷன் கார்டு நகல், நிலவரைபடம் போன்றவற்றுடன் வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலரை அணுகலாம்.

## கால்நடை விவசாயிகளுக்கு கறவை மாடு வளர்ப்பு பயிற்சி

விராலிமலை, : விராலிமலை அருகே பொருவாய் கிராமத்தில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகளுக்கு கறவை மாடு வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி முகாமிற்கு விராலிமலை வேளாண் உதவி இயக்குநர் எட்வர்ட் சிங் தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் லெட்சுமிபிரபா வரவேற்றார். விராலிமலை கால்நடை உதவி மருத்துவர் கார்த்திகேயன், மலைக்குடிப்பட்டி கால்நடை உதவி மருத்துவர் இளவரசு மற்றும் கொடும்பாளூர் கால்நடை உதவி மருத்துவர் மஞ்சுளா ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில் விவசாயிகள் கறவை மாடுகளை தேர்வு செய்வது, பண்ணை வீடு அமைப்பது, தீவன மேலாண்மை, இனப்பெருக்க மேலாண்மை, நோய்கள் மற்றும் தடுப்பு முறைகள், கறவை மாடுகளுக்கான தடுப்பூசி அட்டவணைகள் மற்றும் கன்று பராமரிப்பு பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இதில் விவசாயிகள் அசோலா தீவன புல் வளர்ப்பு, தீவன பயிர்களை வெட்டும் இயந்திரம் மற்றும் பால் கறக்கும் இயந்திரம் போன்றவற்றை பார்வையிட்டனர். விவசாயிகளுக்கு கறவை மாடு வளர்ப்பு முறைகள் பற்றிய கையேடுகள் வழங்கப்பட்டது. இதில் 40 விவசாயிகள் கலந்துகொண்டனர்.பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சுப்பிரமணி,.உமாமகேஸ்வரி ஆகியோர் செய்திருந்தனர்.

## ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த மேலாண்மை பற்றி விளக்க பயிற்சி திருமயம் வட்டார விவசாயிகள் பங்கேற்பு

திருமயம், : நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சிக்காக திருமயம் வட்டார விவசாயிகள் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இப்பயிற்சினை வேளாண் உதவி இயக்குநர் ராமமூர்த்தி துவக்கி வைத்தார். ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் பல்வேறு தலைப்புகளிலான பயிற்சியினை அளித்தனர். உதவி பேராசிரியர் சசிக்குமார் புதுகை

மாவட்டத்திற்கேற்ற மற்றும் பருவத்திற்கேற்ற நெல் சாகுபடி ரகங்கள் பற்றியும், உதவி பேராசிரியர் ஷர்மிளா நெல் சாகுபடியில் மண் மற்றும் பாசன நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த உர மேலாண்மை பற்றியும் விளக்கினர். உதவி பேராசிரியர் ஜோசப் திருந்திய நெல் சாகுபடி மற்றும் நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த களை நிர்வாகம் பற்றியும், உதவி பேராசிரியர் ஜெயபாரதி நெல் சாகுபடியில் உயிர் உரங்களின் பயன்பாடு, முக்கியத்துவம் பற்றியும் விளக்கினர். பேராசிரியர் சசிகலா தரமான விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள், சேமிப்பு முறைகள், விதை சான்று விதிமுறைகள் பற்றியும், பேராசிரியர் சுரேஷ் பயிரை தாக்கும் பூச்சிகள், நன்மை செய்யும் பூச்சிக்களை கண்டறிதல், நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பற்றியும் விளக்கினர். உதவி பேராசிரியர் மதிராஜன் தாவர பூச்சிக்கொல்லிகள் தயாரிப்பு, வேம்பு பண்ணை, வேப்பங்கொட்டை சாறு தயாரிப்பு, மண்புழு உரங்கள் தயாரிக்கும் முறைகள், நெல் வயலில் எலி மேலாண்மை முறைகள் பற்றி விளக்கி னார். பேராசிரியர் ராஜப்பன் நெற்பயிரை தாக்கும் நோய்கள் மற்றும் மேலாண்மை உயிரியல் காரணிகள் பயன்பாடு முறைகள் பற்றியும், உதவி பேராசிரியர் மோகன்குமார் நெல் சாகுபடியில் இயந்திரங்களின் பயன்பாடு, பராமரிப்பு பற்றியும் பயிற்சி அளித்தனர்.

தொடர்ந்து நெல் சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்களையும், நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பயிரிடப்பட்டுள்ள பல்வேறு வகைளான நெல் ரகங்களையும் பார்வையிட்டனர். தானிய சேமிப்பு மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகள் மற்றும் நெல்லில் மதிப்பு கூட்டுதல் பற்றி விவசாயிகளுக்கு இந்திய பயிர் பதனிடும் தொழில்நுட்பக் கழகத்தின் உதவி பேராசிரியர்கள் பயிற்சி அளித்தனர். பின்னர் விவசாயிகள் தானிய சேமிப்பு கொள்கலன்கள் மற்றும் தானியங்களை மதிப்பு கூட்ட பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், இந்திய பயிர் பதனிடும் தொழில்நுட்பக் கழகத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான இயந்திரங்களை நேரில் பார்வையிட்டனர். மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம், தஞ்சையில் உதவி பேராசிரியர் விசாலாட்சி மண் பரிசோதைனையின் முக்கியத்துவம் பற்றியும், உதவி பேராசிரியர் புனிதவதி நீர் மேலாண்மையின் அவசியம் குறித்தும் விவசாயிகளுக்கு

பயிற்சி அளித்தனர். மேலும் அங்கு பயிரிடப்பட்டுள்ள அசோலா மற்றும் நெல், உளுந்து பயிர்களை விவசாயிகள் பார்வையிட்டு அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஆனந்தஜோதி, உதவி விதை அலுவலர் சுப்ரமணியன், அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாண்டியன் மற்றும் ஆனந்தராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

## பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

மதுரை : மதுரையில் விவசாயிகளுக்கு, காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த பயிற்சி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் வழங்கப்பட்டது.

சிவகங்கை மாவட்ட வேளாண்மை அறிவியல் மைய தலைவர் செந்தூர் குமரன், தொழில் நுட்ப விளக்க உரை மற்றும் தக்காளி, வெண்டை, கத்தா ி, மிளகாய், திசுவாழை, போன்ற தாவரங்களை நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் முறைகள் குறித்து, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையினர் மூலமாக மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு மாரணி வாரியேந்தல் கிராமத்தில் பயிற்சி வழங்கப்பட்டது. பின்னர் விவசாயிகள் செய்யும் பயிர்களுக்கு அரசு சார்பில் வழங்கும் மானியங்கள் குறித்தும் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் மதுரை மேற்கு மண்டல தோட்டக்கலை உதவி இயக்குனர் காமராஜ் வரவேற்பு, மதுரை மேற்கு வட்டார வேளாண்மை இயக்குநர் செல்வன் சிறப்புரை, வயல் வெளி பயிற்சி குறித்து தோட்டக்கலை அலுவலர் பிரதீபா, பயிற்சி ஏற்பாடுகள் பகலவன், தென்னகமணி, ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பழநி, : கோடை வெயிலில் இருந்து கால்நடைகளை காக்க எப்படி என்பது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.கோடை காலம் நெருங்கி விட்ட நிலையில் வெயிலின் தாக்கம் இப்போதே துவங்கி விட்டது. கொளுத்தும் வெயிலை சமாளிக்க நிழல்

தேடி அலையும் சூழல் நிலவுகிறது. இதனால் கோடையில் கால்நடைகளை பராமரிக்கும் முறைகள் குறித்து பழநி கால்நடைத்துறை அதிகாரிகளிடம் கூறியதாவது, கோடையில் ஈக்களின் தொல்லையால் கறவை மாடுகள் அமைதியின்றி காணப்படும். ஈக்கள் அவற்றின் மீது அமர்வதாலும், கறவை மாடுகளைச் சுற்றி வட்டமிடுவதாலும் தொந்தரவுகள் ஏற்படும். இதனால் பால் உற்பத்தி பாதிக்கப்படக் கூடும். தொழுவங்களை சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும்.

சாணம், சிறுநீர் போன்ற கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். முடிந்த வரை கடுமையான வெப்ப காலங்களில் கறவை மாடுகள் மீது 2 அல்லது 3 முறை தண்ணீர் தெளிக்கலாம். வெயில் அதிகமாக இருக்கும்போது மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. வெப்பத்தின் அளவு குறைவாக உள்ள காலையிலும், மாலையிலும் மேய்ச்சலுக்கு அனுப்புவது நல்லது. கோடைகாலங்களில் இறைச்சி கோழிகளின் இறப்பு விகிதம் அதிகளவு இருக்கும். வெயில் காலங்களில் முட்டை கோழிக்கு 2.5 சதுர அடியும், இறைச்சி கோழிக்கு 1.5 சதுர அடியும் இடவசதி வேண்டும். பக்கவாட்டில் சாக்குகளை தண்ணீரில் நனைத்து தொங்க விட வேண்டும். வெப்பம் அதிகம் காரணமாக தளர்ச்சி அடையும்போது வைட்டமின் சி 500 மில்லி கொடுக்கலாம். எருமையின் தோல் பசு இனத்தின் தோலைவிட 5 மடங்கு கெட்டியானது.

கறவை எருமைகள் சினைப்பருவத்திற்கு வரும் அறிகுறிகள் கோடையில் வெளிப்படையாகக் தெரியாது. இதனை ஊமைப்பருவம் என்று அழைப்பர். கோடைகாலத்தில் எருமைகளின் இனவிருத்தித்திறனை அதிகரிக்க, நிழலான இடத்தில் கட்டி பராமரிக்க வேண்டும். அருகில் குளங்கள் இருந்தால் நீக்க விடலாம். அவ்வசதி இல்லாவிட்டால் நீரை தெளிக்கலாம். எருமைகளை எப்போதும் கட்டி வைக்காமல் விசாலமான அடைப்புகளில் சுதந்திரமாக திரியவிட வேண்டும். கோடையில் ஏற்படும் வறட்சியினால் ஆடுகளுக்கு மேய்ச்சல் கிடைப்பது அரிது. கோடையில் குடற்புழு தொல்லை இருப்பதால் குடற்புழு நீக்கம் செய்திடுவது நல்லது. இவ்வாறுகூறினர்.

## விவசாயிகளுக்கு பயிர் மேலாண்மை பயிற்சி

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் அருகே உள்ள தெற்கனேந்தல் கிராமத்தில் நிலக்கடலை மற்றும் எள் பயிரின் ஒருங்கிணைந்த மேலாண்மை பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

ஆர்.எஸ்.மங்கலம் வட்டார வேளாண்துறை சார்பில் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் இப்பயிற்சி நடந்தது. வேளாண் உதவி இயக்குநர் மோகன்ராஜ் முன்னிலை வகித்தார். வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகைமையில் நடத்தப்படும் திட்டங்கள் மற்றும் நிலக்கடை,எள் ரகங்கள் தேர்வு மற்றும் விதை நேர்த்தி, பூஞ்சானை விதை நேர்த்தி, நோய் குறித்து வேளாண்மை அலுவலர் உலகு எடுத்துரைத்தார். உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் முருகானந்தம், ராம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்னலெட்சுமி நன்றி கூறினார்.

## திருப்புவனத்தில் கறவை மாடு வளர்ப்பு பயிற்சி கூட்டம்

திருப்புவனம், : திருப்புவனம் கால்நடை மருந்தகத்தில் அம்மா திட்டத்தின் கீழ் விஞ்ஞான முறைப்படி கறவை மாடு வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் கால்நடை மருத்துவர் ரவிக்குமார் கறவை மாடுகள் தேர்வு, தீவனமுறை, பசுந்தீவனத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கி பேசினார். கால்நடை மருத்துவர் சங்கமேஸ்வரன் மதிப்பு கூட்டிய பால்பொருட்களின் மகத்துவம், வருடம் ஒரு கன்று எடுக்கும் முறை பற்றி விளக்கினார். கால்வளர்ப்பு குறித்த விவசாயிகளின் கேள்விகளுக்கு உரிய பதில் அளிக்கப்பட்டது. கால்நடைகளுக்கு தேவையான தாது உப்புகள் வழங்கப்பட்டன. முகாமிற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி, உதவி தொழில்நுட்ப மேலாளர் நந்தினி ஆகியோர் செய்திருந்தனர்.

**தூத்துக்குடி மீன் வளக்கல்லூரியில் மீன் வள புள்ளியியல் தகவல் சேகரிப்பு பயிற்சி**

தூத்துக்குடி, : தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் மீன்வள புள்ளியியல் தகவல் சேகரிப்பு பயிற்சி முகாம் தொடங்கியது. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் அங்கமான தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உலக வங்கி நிதியுதவியுடன், மாநில மீன்வளத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் மீன்வளப் புள்ளியியல் சேகரிப்பு முறைகள் குறித்த பயிற்சி முகாம் தொடங்கியது.

மீன்வளத் துறை இணை இயக்குநர் அமல்சேவியர் பயிற்சி முகாமைத் தொடங்கி வைத்து பேசியதாவது, இந்த தகவல் சேகரிப்பு மூலம் நமது பகுதியிலுள்ள மீன்களின் தற்போதைய நிலையை அறியவும் எவ்வளவு மீன்களை நாம் அறுவடை செய்யலாம் என்பதற்கான சரியான முடிவை எடுக்க திட்டமிடுபவர்கள் மற்றும் மீன்பிடி மேலாளர்கள் போன்றோர்களுக்குத் தேவையான விவரங்களைப் பெறவும் உதவும் என்றார்.

கல்லூரி முதல்வர் சுகுமார் பேசுகையில், மீன்வளங்களை நிலையான வளங்குன்றா வகையில் மீன்களை அறுவடை செய்ய தேவையான மீன்வள மேலாண்மைத் திட்டத்தை வகுத்திட இந்த பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும் என்றார்.தொடர்ந்து, மீன் வளப் புள்ளியியல் விவரம் சேகரிப்பு என்ற பயிற்சிக் கையேடு வெளியிடப்பட்டது.

மீன்வள மற்றும் சூழலியல் மேலாண்மை பள்ளித் தலைவர் சீனிவாசன், மீன்வளக் கல்லூரி மீன்வள உயிரியல் துறை தலைவர் பிரான்சிஸ், பயிற்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜவஹர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## காதலர் தினத்தை முன்னிட்டு ஊட்டியில் ரோஜா பூ ரூ.20-க்கு விற்பனை



ஊட்டி,

காதலர் தினத்தை முன்னிட்டு ஊட்டியில் ரோஜா பூ ரூ.20-க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் காதலர் தின வாழ்த்து அட்டைகளும் அதிகளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ளது.

காதலர்தினம்

உலகம் முழுவதும் பிப்ரவரி மாதம் 14-ந்தேதி காதலர் தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அன்றைய தினம் காதலர்கள் தங்களது துணைக்கு ரோஜா பூக்களையும், காதலர் தின வாழ்த்து அட்டைகளையும் கொடுத்து மகிழ்வார்கள். ஊட்டியில் காதலர்களின் சின்னமாக கருதப்படும் ரோஜாவுக்கு தனி பூங்கா அமைக்கப்பட்டு உள்ளது.

தற்போது இந்த பூங்காவில் பச்சை, நீலம், வெள்ளை, மஞ்சள், சிவப்பு உள்ளிட்ட பல்வேறு வண்ணங்களில் ரோஜா மலர்கள் பூத்து குலுங்குகின்றன. எனவே இந்த ஆண்டு காதலர் தினத்தை கொண்டாட ஊட்டிக்கு வரும் காதலர்களை இந்த ரோஜா மலர்கள் பெரிதும் கவரும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

விலைஅதிகரிப்பு

ஊட்டியில் ரோஜா பூங்கா இருந்தபோதிலும், ரோஜா மலர்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுவது இல்லை. ஒசூர் மற்றும் கர்நாடகா மாநிலத்தில் இருந்துதான் ரோஜா மலர்கள் அதிகளவு இறக்குமதி செய்யப்படுகின்றன. காதலர் தினத்தன்று ரோஜா மலர்களுக்கு அதிகளவு கிராக்கி இருக்கும் என்பதால் இந்த மலரின் விலை தற்போது அதிகரித்து உள்ளது. ஊட்டியில் ஒரு ரோஜா பூவின் விலை ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்படுகிறது.

வாழ்த்துஅட்டைகள்

இதுகுறித்து ரோஜா மலர் வியாபாரிகள் கூறியதாவது:- ஊட்டியில் ரோஜா மலர்கள் உற்பத்தி செய்யப்படுவது இல்லை. இதனால் ஒசூர் மற்றும் கர்நாடகா மாநிலத்தில் இருந்துதான் அதிகளவு ரோஜா மலர்கள் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு ரோஜா மலர்களின் தேவைக்கு ஏற்ப உற்பத்தி இல்லை. இதன்காரணமாக ரோஜா மலர்களின் விலை அதிகரித்து உள்ளது.

ஒரு மலர் ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்படுகிறது. வருகிற நாட்களில் இதன் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மேலும் காதலர் தினத்தை முன்னிட்டு ஊட்டியில் வாழ்த்து அட்டைகளும் விற்பனைக்காக குவிந்து உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## கீரமங்கலத்தில் விவசாயத்திற்கு தேவையான களைக்கொத்திகள் செய்யும் பணி தீவிரம்



கீரமங்கலத்தில் பயிர்களில் உள்ள களைகளை நீக்க பயன்படும் களைக்கொத்திகள் செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

எந்திரங்களே

விவசாயிகள் தங்கள் விவசாயம் செழிக்க முந்தைய காலங்களில் இலை தலைகளையும், குப்பை, எரு போன்றவற்றையும் இட்டு விவசாயம் செய்து வந்தனர். பின்னர் விவசாயத்தில் நவீனத்தை புகுத்துவதற்காக பயிர்கள் நடவு செய்யும் போதே ரசாயன உரங்களையும். பிறகு பூச்சி

தாக்குதலில் இருந்து பயிர்களை காப்பாற்ற பூச்சிக்கொல்லி மருந்துகளையும் தெளித்து வந்தனர். இதனால் மண் வளம் மற்றும் பயிர் வளம் கெட்டுவிட்டதாக தற்போது வெளிவரும் ஆய்வுகள் கூறுகின்றன. ஆனாலும் நாளுக்கு நாள் புதிய நவீன முறைகளை விவசாயத்தில் புகுத்தி வருகிறார்கள். அதே போல முன்பு விவசாயத்தில் பெரும்பாலும் உடல் உழைப்பே அதிகமாக இருந்தது. ஆனால் இப்போது எந்திரமயமாகிவிட்டது. விதை விதைப்பது முதல் அறுவடை வரை எல்லா பணிகளுக்கும் எந்திரங்களே பயன் பட்டு வருகிறது.

ரசாயனமருந்து

விவசாயத்தில் எத்தனை புதிய நவீன எந்திரங்களை பயன்படுத்தினாலும், தண்ணீர் பாய்ச்சுவதற்காக மண்வெட்டி மிகவும் அவசியம். அந்த மண்வெட்டிகளையும், களைக் கொத்திகளையும் நேர்த்தியாக செய்வதில் புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்களில் கீரமங்கலம் மண்வெட்டி மற்றும் களைக் கொத்திகளுக்கு தனி மவுசு உண்டு. விவசாயம் செய்யும் காலங்களில் கீரமங்கலத்தில் மண்வெட்டிகள் மற்றும் களைக் கொத்திகளை வாங்க ஏராளமான விவசாயிகள் வருகிறார்கள்.

அதே போல இப்போது எந்த தானிய விதை விதைத்தாலும் விதைக்கும் முன்பே களைக்கொல்லி என்ற ரசாயன மருந்து தெளித்த பிறகே விதை விதைக்கும் நிலை வந்துவிட்டது. ஏனென்றால் பயிர்களுக்கு இடையில் களைகள் முளைத்து விடாமல் முளையிலேயே அழிக்க இந்த ரசாயன மருந்துதெளிக்கப்படுகிறது.

தானியபயிர்கள்

அதன் பிறகு பெரிய, நேரான பாத்திகள் இருந்தால் நடவுகளில் உள்ள களைகளை எந்திரம் மூலம் பறிக்கப்பட்டது. ஆனால் கோடை பயிர்களில் உள்ள களைகளை ஆட்கள் மூலம் தான் பறிக்க வேண்டும். மேலும் கடலை போன்ற பயிர்களில் மண் அணைக்கவும் வேண்டியுள்ளது. அதனால் பழைய விவசாய கருவியான களைக்கொத்திகள் (களைகீறி)

இன்னும் புழக்கத்தில் உள்ளது. அதாவது நெல் அறுவடை முடிந்த பிறகு அந்த வயல்களில் கடலை, உளுந்து போன்ற சிறு தானிய பயிர்கள் விதைக்கப்படுகிறது. அதில் உள்ள களைகளை அகற்றவும் கடலை செடிகளுக்கு மண் அணைக்கவும் இந்த களைக்கொத்திகள் பயன்படுகிறது.

இப்போது சிறு தானிய விவசாயம் தொடங்கியுள்ளதால் கடந்த சில வாரங்களாக கீரமங்கலத்தில் களைக்கொத்திகள் வாங்க விவசாயிகள் வந்து கொண்டிருக்கின்றனர். கீர மங்கலத்தில் களை கொத்திகள் செய்யும் தொழிலாளிகள் கூறியதாவது:- விவசாயிகள் களைக் கொல்லிகள் பயன்படுத்த தொடங்கியதில் இருந்தே களைக்கொத்திகள் தயாரிப்பு குறைந்துவிட்டது. ஆனால் களைக்கொல்லிகளால் மண் வளம் கெட்டுவிடுகிறது என்றும் இந்த ஆண்டு களைக்கொத்திகளை வாங்க விவசாயிகள் பலர் வருகின்றனர். இரும்பு, கழி, கூலி எல்லாம் சேர்த்து ஒரு களைக்கொத்தி ரூ. 150-க்கு விற்பனை செய்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**நெற்பயிர்களை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை விவசாயிகளுக்கு பயிற்சி**



சின்னமனூர்

சின்னமனூர் பகுதியில் நெற்பயிர்களை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

குலைநோய் பாதிப்பு

தேனி மாவட்டம் சின்னமனூர் வட்டாரத்தில் சுமார் 3,700–க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் 2–ம் போகமாக நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. தற்போது அவற்றில் கதிர்கள் வரும் நிலையில் இருக்கிறது. இதையடுத்து விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி குச்சனூர் பகுதியில் உள்ள துரைச்சாமிபுரத்தில் நடந்த பயிற்சிக்கு சின்னமனூர் வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகரன் தலைமை தாங்கினார். இதில் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் நாட்ராயன் கலந்து கொண்டு பேசும் போது கூறியதாவது:–

நெற்பயிரில் பூச்சிகளால் ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்படுத்த விதைப்பு காலம் முதல் ஒருங்கிணைந்த முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கடந்த மாதம் அதிகமாக பனிப்பொழிவு இருந்ததால் நெற்பயிரியில் இலைப்புள்ளி மற்றும் குலைநோய் பாதிப்புகள் ஏற்பட்டன.

நோய் எதிர்ப்பு சக்தி

விதைகள் மூலம் பரவும் இந்த நோய்களை கட்டுப்படுத்த விதைநேர்த்தி செய்வது அவசியம். இதன்படி ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் கார்பன்டாசிம் அல்லது டி.விலீஜிடி 4 கிராம் மருந்தை கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின்னர் விதைக்க வேண்டும். இதனால் விதையுடன் இருக்கும் நோய்க்காரணிகள் நீக்கப்படும். பயிர்களுக்கு ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்துவதும் பூச்சி நோய் தாக்குதலுக்கு காரணமாக உள்ளது.

எனவே மண் பரிசோதனை செய்து தேவைக்கு ஏற்ப உரமிடுவது அவசியம். இதனால் செலவும், பூச்சி நோய் தாக்குதலும் குறையும். மேலும், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா போன்ற இயற்கை நுண்ணுயிர்களை பயன்படுத்துவதால் பயிர்களுக்கு சத்துக்கள் கிடைத்து நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

<u>பூச்சிக்கொல்லி மருந்துகள்</u>

தேவையின் அடிப்படையில் மட்டுமே தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தண்ணீர் அதிகரித்தால் புகையான் நோய் தாக்குதல் ஏற்படும். ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை அதிகமாக பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். அதற்கு மாற்றாக வேம்பு சார்ந்த மருந்துகளை தெளிக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த பயிற்சியில் வேளாண்மை அலுவலர் சங்கர், துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் வினோத், காமாட்சிபுரம் வேளாண்மை அறிவியல் மைய பயிற்றுனர் மகேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வரத்து அதிகரித்ததால் திருச்சி காந்தி மார்க்கெட்டில் தக்காளி விலை கடும் வீழ்ச்சி**



வரத்து அதிகரித்ததால் திருச்சி காந்தி மார்க்கெட்டில் தக்காளி விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்து உள்ளது.

காய்கறிகள்

திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு தினந்தோறும் வெளிமாநிலங்களில் இருந்தும், பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. ஊட்டி போன்ற கோடை வாசஸ்தலங்களில் இருந்து கேரட் விற்பனைக்கு வருகிறது. கடந்த சில நாட்களாக வரத்து குறைந்ததால் திருச்சி காந்தி மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்து இருந்தது. தற்போது ஓரளவுக்கு வரத்து அதிகரிக்க தொடங்கியதால் காய்கறிகளின் விலை சற்று குறைய தொடங்கி உள்ளது.

தக்காளிவிலைவீழ்ச்சி

குறிப்பாக தக்காளி விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த வாரத்தில் கிலோ ரூ.30 முதல் 40 வரை விற்கப்பட்ட தக்காளி இப்போது கிலோ ரூ.10-க்கு விற்பனையாகிறது. கேரட் கிலோ ரூ.35-க்கும், பீன்ஸ் ரூ.30-க்கும், அவரைக்காய் ரூ.30-க்கும், உருளைக்கிழங்கு ரூ.25-க்கும், பாகற்காய் ரூ.30-க்கும், பீட்ரூட் ரூ.25-க்கும் விற்கப்படுகிறது. கத்தரிக்காய் விலை சிறிது உயர்ந்து வரி கத்தரிக்காய் ரூ.30-க்கும், பாளையம் கத்தரிக்காய் ரூ.60-க்கும் விற்கப்படுகிறது.

இதேபோல் சின்ன வெங்காயம் ரூ.35-க்கும், பெரிய வெங்காயம் ரூ.25 முதல் 30-க்கும் விற்பனையாகிறது. ஒரு சில கடைகளில் விலைகளில் சிறிதளவு வித்தியாசம் காணப்படுகிறது. காந்தி மார்க்கெட்டில் காய்கறிகள் விலை குறித்து வியாபாரி ஒருவர் கூறுகையில், “தற்போது காய்கறிகள் வரத்து ஓரளவுக்கு உள்ளதால் விலைகள் அதிக அளவில் உயரவில்லை. ஆனால் முருங்கைக்காய் மட்டும் கிலோ ரூ.120 வரை விற்பனையாகிறது. தக்காளி வரத்து அதிகரித்து உள்ளதால் கிலோ ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது” என்றார்.